**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF SUB JUDGE, NANGUNERI.

OS.179 of 2020

Civil Case No :: Dw-3

Name :: முத்து கிருஷ்ணன்

Father's/Husband's Name :: இசக்கி

Village :

Taluk ::

Calling ::

Age ::

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 in the day 12.03.2026

**<u>முதல் விசாரணை</u>**

நான் நான்குநேரி வட்ட சார் ஆய்வளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து வந்த அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். அழைப்பாணையில் சொல்லப்பட்டுள்ள ஆவணங்களை நான் கொண்டு வந்துள்ளேன். நான்குநேரி தாலுகா , ஆழ்வாநேரி கிராமம் சர்வே எண்.216/13 எத்தனை உட்பிரிவுகள் செய்யப்பட்டுள்ளது என்றால் 6 உட்பிரிவுகள் செய்யப்பட்டுள்ளது. 216/13A, 216/13B, 216/13C, 216/13D, 216/13E மற்றும் 216/13F ஆக உட்பிரிவுகள் செய்யப்பட்டுள்ளது. நான் அதற்குரிய அ பதிவேட்டின் சான்றிட்ட நகல், UDR க்கு பின்பு உள்ள புலவரைபடம் நகல், நத்தம் புலவரைபடம் நகல், இணைய வழி அ பதிவேடு நகல், இணைய வழி நத்தம் அ பதிவேடு நகல், இணையவழி நத்தம் புலவரைபடம் ஆகியவற்றை தாக்கல் செய்கிறேன். சா.சா.ஆ-3 வரிசை (எண்ணம் 6) ஆகும். A பதிவேட்டில் பின்பகுதியில் As per Order DR No 30.07.1994 என்று

உள்ளதில் அந்த கோப்பின் எண் என்ன என்றால் அது நொறுங்கிய நிலையில் இருப்பதால் எனக்கு தெரியவில்லை. என்னிடம் காட்டப்படுவது சர்வே எண்.216/13 சம்மந்தமாக தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் தங்கள் அலுவலகத்தால் வழங்கப்பட்ட பதில் என்றால் சரிதான். அது பி.சா.ஆ.6 ஆகும். மேற்படி பி.சா-ஆ.6 ல் எந்த வருடம் உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் 1994 ம் வருடம் ஆகும்.

**குறுக்கு விசாரணை**

சர்வே எண் 216/13 என்பது புஞ்சை நிலமா அல்லது நத்தம் நிலமா என்றால் புஞ்சையில் இருந்து நத்தமாக எடுத்துவிட்டனர். அது 1994 ம் ஆம் ஆண்டு புஞ்சையில் இருந்து நத்தமாக எடுக்கப்பட்டுள்ளது. புல எண் 216/13 UDR அ பதிவேடு ன் படி V. கண்ணையா என்பவரின் பெயரில் பட்டா எண்.190 என உள்ளது . இணையவழி அ.பதிவேட்டு அனைத்து உட்பிரிவுகளிலும் V. கண்ணையா பெயரில் இருக்கிறது என்றால் 13A, 13E, 13 F ஆகிய உட்பிரிவுகளில் மட்டும் கண்ணையா பெயர் கூட்டாக உள்ளது. சர்வே எண் 216/13 ன் மொத்த விஸ்தீரனம் எவ்வளவு என்றால் 0.27.66 ஏர்ஸ் ஆகும். எங்கள் அலுவலகத்தில் தகவல் கொடுப்பதற்கு என்று தனியாக அலுவலர் இருக்கிறார் என்றால் சரிதான். பி.சா-ஆ-6 ஆவணத்தில் என்னென்ன கேள்விகள் கேட்கப்பட்டுள்ளது என்ற விவரம் இல்லை என்றால் சரிதான். பி.சா-ஆ-6 ஆவணம் என்னால் வழங்கப்பட்டது இல்லை என்றால் சரிதான். எங்கள் அலுவலகத்தில் வழங்கப்பட்டது. மேற்படி ஆவணத்தை வழங்கியவரை விசாரித்தால்தான் முழுவிவரம் தெரியும் என்றால் சரிதான்.